**தலைப்பு 221 - தொழில் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தொழில் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2022 யூன் 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஆகஸ்ட் 19 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொழில் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென

முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தென் மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என்பது,

(ஆ) முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் முன்வைக்கப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன என்பது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) முற்பணக் கணக்கு மீதி**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிச் செயலாற்றல் கூற்றில் முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 103,609,362 காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அது ரூபா 103,607,793 ஆக வேண்டும். அதற்கமைய வேறுபாடு ரூபா 1,569 ஆகும். கட்டுநிதி இணக்கக் கூற்றின் பிரகாரம் மீதி அந்த குறைவடைய வேண்டும். | நிதிச் செயலாற்றல் கூற்றினை தயாரிக்கும் போது முற்பண கொடுப்பனவுகளின் கீழ் 2020 ஆம் ஆண்டில் இடமாற்றம் பெற்று வருகை தந்த உத்தியோகத்தர் ஒருவரின் ரூபா 1,569 ஆன நிலுவைக் கடன் தவணை இரு தடவைகள் கருத்திற் கொண்டமையால் இந்த தவறு ஏற்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

**(ஆ) வைப்புக்கள்**

--------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான தனிப்பட்ட மீதிகளுக்கு செலவு வைக்கப்படாத திணைக்களத்தின் வைப்புக் கணக்கில் உள்ள ஊழியர் நலன்புரி நிதியத்தின் மிதிகளின் பெறுமதி ரூபா 301,779,837 ஆகும். | 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக உள்ள வைப்புக்களை தீர்ப்பனவு செய்தல் மிகவும் மந்த கதியில் இடம்பெறுவதுடன் நீதிமன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் போது குறித்த அனைத்து உத்தியோகத்தர்களினதும் சரியான தகவல்களை பெற்றுக் கொள்ளும் நடைமுறையொன்று செயற்படுத்தப்படுவதுடன் புதிய மீதிகளை தீர்ப்பனவு செய்யும் போது தவணைகளுக்கமைய தீர்ப்பனவு செய்யும் நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. காலாவதியான பொது வைப்பு அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டு மீண்டும் கொண்டுவரும் போது சிரமத்திற்கு உள்ளாகின்றமையால் உரித்தாளர்களை இனங்கண்டு தீர்ப்பனவு செய்யுமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | பொது வைப்புக் கணக்கில் காணப்படும் மீதிகளை இனங்கண்டு தனிப்பட்ட கணக்குகளுக்கு தாமதமின்றி செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ii) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக கணக்கின் நலனாளிகளுக்கு செலுத்த வேண்டிய EPF அல்லாத பணங்களின் (C கணக்கில்) பெறுமதி ரூபா 82,008,172 ஆகும். இதனுள் நட்டஈடு செலுத்துவதற்காக நீதிமன்றம் மற்றும் | உரிய தரப்பினரிடமிருந்து மற்றும் நபர்களிடமிருந்தும் இந்த பணத்தை தீர்ப்பனவு செய்வதற்கு ரிக்விஷன் பத்திரத்தினை சமர்ப்பிக்காமையால் இதுவரையிலும் அப்பணம் வைப்புக் கணக்குகளில் நிறுத்தி நேர்ந்திருந்தது. | பொது வைப்புக் கணக்கில் காணப்படும் மீதிகளை இனங்கண்டு தனிப்பட்ட கணக்குகளுக்கு தாமதமின்றி செலவு வைப்பதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | நீதிமன்றம் அல்லாத வழிகளில் கிடைத்த ரூபா 79,200,752 தொகையும் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டிய ரூபா 149,873 தொகையும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டிய ரூபா 68,375 தொகையும் பல்வேறு தரப்பினர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 2,589,172 தொகையும் உள்ளடங்கியிருந்தது. | | எடுக்க வேண்டியமை. |

**(இ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிக்கூற்றுக்களில் ACA-6 கூற்றில் மற்றும் ACA-2(i) கூற்றுக்களிடையே 2021 ஆம் ஆண்டில் அலுவலகக் கட்டிடங்கள், புத்துருவாகும் வேலைகளின் பெறுமதி ஆகியவற்றுக்கிடையேயான வேறுபாடு ரூபா 215,829,631 ஆக காணப்பட்டதுடன் அத்தொகை ACA-6 கூற்றில் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த பெறுமதிகளுக்கிடையே காணப்படும் ரூபா 215,829,631.00 ஆன வேறுபாட்டிற்கு காரணமாக அந்த செலவினத் தலைப்புக்களின் கீழ் திறைசேரியின் அச்சீடுகளின் மூலம் கட்டிடத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நேரடியான வரவு மற்றும் நேரடியான செலவுகள் அமைந்திருந்தது. | நிதிகூற்றுக்களை சரியாக தயாரிக்கப்பட வேண்டியதுடன் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர் களினால் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | 221-2-4-2104 செலவின தலைப்பின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 745,000 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் ACA-6 கூற்றில் கட்டிடம் மற்றும் நிர்மாணங்களாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 221-2-4-2104 செலவினத் தலைப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 745,000 பெறுமதியில் கட்டிடத்திற்கு இடைத்தடுப்புக்களை பொருத்துவதற்கான செலவினமொன்று என்பதால் இது ACA-6 கூற்றில் கட்டிடம் மற்றும் நிர்மாணங்களின் கீழ் சொத்தாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | நிதிகூற்றுக்களை சரியாக தயாரிக்கப்பட வேண்டியதுடன் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர் களினால் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | ACA-6 கூற்றில் 2021 ஆம் ஆண்டிற்காக புத்துருவாகும் வேலையாக ரூபா 338,726,860 குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டில் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த புத்துருவாகும் வேலைகளின் பெறுமதி ரூபா 384,203,502 ஆகும். அதற்கமைய ரூபா 45,476,642 ஆன புத்துருவாகும் வேலை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ரூபா 39,356,642 தொகையான Residential Building இல் குறிப்பிடப்பட்டுள்ள Office Building இன் கீழ் சொத்துக்கள் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. பெறுமதிகள் WIP இன் கீழ் கணக்கு வைக்கப்பட வேண்டுமென இனங்காணப்பட்டதன் பின்னர் 2022 ஏப்ரல் மாதத்தில் திருத்தப்பட்டது.<br><br>ரூபா 6,652,435 தொகையான அலுவலக பழுதுபார்த்தல் செலவினம் 2001 ஆம் ஆண்டில் செலவினத் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் ACA-6 கூற்றில் உள்ளடக்கப்படவில்லை.<br><br>வ.அ.897 பெறுமதி ரூபா 77,926,053 ஆன போதிலும் அதன் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ள பெறுமதியானது ரூபா 71,371,700 ஆகும். | நிதிகூற்றுக்களை சரியாக தயாரிக்கப்பட வேண்டியதுடன் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர் களினால் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (iv) | 2017 யூன் 28 ஆந் திகதிய நிதி மற்றும் பொதுசன ஊடக அமைச்சின் 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டு முதல் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் கைதவிர்க்கப்பட்ட அனைத்து சொத்துக்கள் தொடர்பிலான தகவல்கள் உரிய காலாண்டின் இறுதியில் கொம்ரோலர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகள், கட்டிடங்கள் மற்றும் வாகனங்கள் ஆகிய சொத்துக்கள் தொடர்பில் உரிய தகவல்கள் கொம்ரோலர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் கட்டுப்பாட்டு பிரிவினால் மேற்கொள்ளப்படும் இயந்திரம் மற்றும் அலுவலக உபகரணங்கள் தொடர்பான தகவல்களை எதிர்காலத்தில் அனுப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் சொத்துக்கள் தொடர்பில் சரியான தகவல்களை கொம்ரோலர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (v) | மீளாய்வாண்டினுள் கைதவிர்க்கப்பட்ட இயந்திரம் மற்றும் உபகரணங்களின் சுவீகரிப்பின் கிரயம் நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் அகற்றல்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் விற்பனை பெறுமதியான ரூபா 2,480,673 தொகை ACA-6 கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தமையால் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதியல்லாத சொத்துக்கள் மிகைக் கணிப்பீட்டிற்கு உள்ளாகியிருந்தது. | ACA-6 கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கைதவிர்க்கப்பட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ரூபா 2,480,673 பெறுமதி விற்பனை பெறுமதி அல்ல என்பதும் அது சொத்துக்களின் கிரயம் என்பதும் பின்னர் உறுதிப்படுத்தப்பட்டது. | இயந்திரம் மற்றும் சொத்துக்களின் சுவீகரிக்கும் கிரயத்திற்கு பதிலாக விற்பனைப் பெறுமதியான ரூபா 2,480,673 தொகை கணக்குகளில் அகற்றப் பட்டுள்ளமை தொடர்பில் கணக்காளர் உறுதிப்படுத்தியுள்ளமையால் சொத்துக்களின் கிரயத்தினை கணக்கு களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஈ) கணக்காய்வுக்கான சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 710,278,354 தொகையான வைப்பு மீதி ரூபா 470,736,369 தொகைக்கான பட்டோலைகள் மற்றும் தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான சே.அ.அ அல்லாத (C) மீதிப்பட்டியல் இணைப்பு 1 மூலம், மாவட்ட அலுவலகங்களுக்குரிய மீதிப் பட்டியல் இணைப்பு 2 மூலம் இத்துடன் அனுப்பப்பட்டுள்ளதுடன் சே.அ.அ கணக்கிற்குரிய மீதிப் பட்டியல் இலத்திரனியல் அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கின்றேன். | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு உரிய சான்றுகள் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 26 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 2021/03 இன் 7.2 பந்தியின் பிரகாரம் கட்டுநிதி இணக்கக் கூற்றின் 2020 ஆம் ஆண்டிற்கான ஒப்பீட்டு பெறுமதிகள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அரச கணக்குகள் வழிகாட்டில் இலக்கம் 2021/03 இன் வழங்கப்பட்டுள்ள மாதிரி (ACA-7) பிரகாரம் கட்டுநிதி இணக்கக் கூற்றின் 2020 ஆம் ஆண்டின் ஒப்பீட்டு பெறுமதிகள் உள்ளடக்கும் நிரல் வேறுபடுத்தப்பட்டிராமையால் இந்த தவறு இடம்பெற்றுள்ளது. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 3 செலவின விடயங்களுக்குரிய ரூபா 7,200,000 ஆன மொத்த நிதியேற்பாடும் செலவினங்களை குறைப்பதற்கான 2021 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அமைச்சரவை குறிப்பின் பிரகாரம் மூடப்பட்டிருந்ததுடன் 4 செலவின விடயங்களுக்குரிய ரூபா 4,400,000 தொகையான நிதியேற்பாடு 2021 ஆம் ஆண்டினுள் 100 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக வெளிநாட்டு பயணங்கள் இடம்பெறாமை, அலுவலகங்கள் மூடப்பட்டமை, பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு முடியாமை மற்றும் 2021 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் செலவினங்களை குறைப்பதற்கான நிதியேற்பாடுகளை செலவிட முடியாதிருந்தமை. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் செலவின மதிப்பீடு இயலுமான அளவில் நடைமுறைக்கு சாத்தியமாகவும் சரியானதாகவும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஆ) 2021 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக எதிர்பார்க்கப்பட்ட | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் செலவின மதிப்பீடு |

| | | | |
|---|---|---|---|
| | செலவினங்களை குறைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டம் 1 இன் விடயங்களிலிருந்து ரூபா 441,270,000 மூடப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 33 செலவின விடயங்களுக்குரியதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,417,295,319 ஆன நிதியேற்பாட்டில் ரூபா 1,011,083,360 பயன்படுத்தப்பட்டிராததுடன் அதனால் ஏற்படும் சேமிப்புக்கள் 50 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | செலவினங்களை மேற்கொள்ள முடியாமையால் 2021.08.28 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் செலவினங்களை குறைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டம் 1 இன் விடயங்களிலிருந்து ரூபா 441,270,000 மூடப்பட்டுதல். | இயலுமான அளவில் நடைமுறைக்கு சாத்தியமாகவும் சரியானதாகவும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (இ) | 221-1-1-0-1404 செலவின விடயத்திற்காக பாதிடப்பட்ட மதிப்பீட்டு ஒதுக்கீடு ரூபா 33,000,000 ஆக காணப்பட்டதுடன் மொத்த செலவினம் ரூபா 74,334,386 ஆக காணப்பட்டது. நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் ரூபா 41,334,500 மாற்றப்பட்டிருந்ததுடன் மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டை விஞ்சிய செலவினம் 125 சதவீதம் ஆகும். | மெஹவர பியச கட்டிடத்தின் வீதவரி மதிப்பீட்டுப் பெறுமதியை விட உயர்வான அளவினை கொண்டிருந்தமை மற்றும் மாவட்ட அலுவலங்களில் குத்தகை உடன்படிக்கையை புதுப்பிக்கும் போது அதிகரித்தமை ஆகியன இதற்கு காரணமாக அமைந்துள்ளது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் செலவின மதிப்பீடு இயலுமான அளவில் நடைமுறைக்கு சாத்தியமாகவும் சரியானதாகவும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

### 2.3 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுத்தப்படல்

பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளுக்குரியதாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக திறைசேரிக் கணக்கு கூற்றின் பிரகாரம் பொறுப்புக்களின் மீதி ரூபா 92,787,487 ஆக | எமது திணைக்களத்தின் வலய அலுவலக, மாவட்ட அலுவலக, உப அலுவலக, மாவட்ட கைத்தொழிற்சாலைகளில் பரிசோதனை பொறியியல் | திணைக்களத்தினால் அனைத்து நிதியாண்டிலும் இறுதியில் விடயங்களுக்குரிய கணக்குகளில் |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டதுடன் அத்திகதியில் உள்ளபடியாக கணக்கு அறிக்கைகளில் காண்பிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களின் மீதி ரூபா 13,301,690 ஆகும். அதற்கமைய ரூபா 47,245,030 பெறுமதியான மொத்த சொத்துக்களின் பெறுமதி கணக்குகளுக்கு கொண்டு செல்லப்பட்டிராததுடன் ரூபா 32,240,777 பெறுமதியான பொறுப்புக்கள் ஒவ்வொரு செலவின விடயங்களிலும் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | அலுவலகங்கள் மற்றும் ஏனைய பிரிவுகளில் எமக்கு அறிக்கையிடப்படும் சில பொறுப்புக்களை செலுத்துவதற்காக முன்வைக்காமை இவ்வாறான வேலைப்பாட்டிற்கு காரணமாக அமைந்துள்ளது. | சரியான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) | திறைசேரி கூற்றில் பதிவு செய்யப்பட்டிருந்த ரூபா 24,562,247 தொகையான கடப்பாடுகள் கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2020 ஆம் ஆண்டில் இந்த பொறுப்புக்கள் செலுத்தி நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் திறைசேரி கணக்கு கூற்றின் ஊடாக பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்தல் இடம்பெறாமையால் தொடர்ந்தும் பொறுப்பொன்றாக SA-92 இல் குறிப்பிடப்படுகின்றது. அதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திணைக்களத்தினால் அனைத்து நிதியாண்டிலும் இறுதியில் விடயங்களுக்குரிய கணக்குகளில் சரியான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டியமை. |
| (இ) | 03 செலவின விடயங்களின் கீழ் கணக்கு கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் பதிவேட்டு பெறுமதி ஆகியவற்றுக்கிடையே ரூபா 119,218 ஆன வேறுபாடொன்று நிலவியது. | கணக்கு கூற்றுக்களுக்கான தகவல்களை உள்ளடக்கும் போது ஏற்பட்ட தாமதம் காரணமாக இந்த தவறு ஏற்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகள் பொறுப்புக்கள் கூற்றில் சரியாக பதிவு செய்யப்படல் வேண்டும். |

**2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

இது தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **அவதானிப்புகள்**<br>**பெறுமதி** | **இணக்கமின்மைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|---|
| | | **ரூபா** | | | |
| (அ) | நிதிப்பிரமாணம் 208 | 397,410,290 | தொழில் திணைக்களத்தினால் ஒப்பந்தம் ஆரம்பிப்பதற்கு முன்னர் மொத்த தொகை கட்டிடங்கள் திணைக்களத்திற்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்த காரணத்தால் ரூபா 397,410,290 செலவிடப்படாது செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | பெறுகை தீர்மானங்கள் கட்டிடத் திணைக்களத்தின் கோரிக்கை மற்றும் பொறியியலாளர் (சிவில்) இன் பரிந்துரையின் அடிப்படையில் நிர்மாணங்களை மேம்படுத்தும் பணிகளுக்காக பணம் விடுவித்தல் இடம்பெற்றுள்ளது. | முகாமைத்துவத்தினால் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தொழில் திணைக்கள சுற்றறிக்கை | | | | |
| (i) | தொழில் ஆணையாளர் நாயகத்தின் 1999 பெப்ரவரி 11 ஆந் திகதிய 01/99 ஆம் இலக்க சுற்றறிக்கை 1.1, 1.1(3), 5.2 ஆம் பந்திகள் | - | ஊழியர் நலன்புரி நிதியத்தின் நிலுவைப் பங்களிப்பு பணம் மற்றும் மிகைக் கட்டணத்தை அறவிடும் போது சுற்றறிக்கையின் பிரகாரம் இடம்பெற்றிருக்கவில்லை | நிலுவைப் பங்களிப்பு பணம் மற்றும் மிகைக் கட்டணப் பணத்தை அறவிடும் போது விசாரணை மேற்கொள்ளல், கணிப்பிடுதல் மற்றும் கட்டளைகளை அனுப்புதல் ஆகிய பணிகள் முறையாக பேணிச் செல்லுதல் இதுவரையிலும் பிரதி தொழில் ஆணையாளர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளமையால் இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது | திணைக்களத்தின் உள்ளக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (ii) தொழில் ஆணையாளர் நாயகத்தின் 2020 மே 08 ஆந் திகதிய 11/2000 ஆம் இலக்க திணைக்களச் சுற்றறிக்கை 3(iii) மற்றும் 2(iii) | - | திறந்த பிடியாணை வழக்குத் தொடர்பில் நாளதுவரையாக்கப்பட்ட பதிவேடொன்றை பேணிச் செல்லல், மும்மாத அறிக்கைகளை சட்ட செயற்பாட்டு பிரிவிற்கு சமர்ப்பித்தல், திறந்த பிடியாணையை நடைமுறைப்படுத்துவதற்கு விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல் ஆகியன இடம்பெற்றிருக்கவில்லை | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான திருத்தப்பட்ட ஒட்டுமொத்த செயற்பாடற்ற வழக்குகளின் எண்ணிக்கை 4,393 மற்றும் அவற்றின் நிதிப் பெறுமதி ரூபா 2,162,338,383 ஆக காணப்படுவதுடன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாகத திருத்தப்பட்ட ஒட்டுமொத்த திறந்த பிடியாணை வழக்குகளின் எண்ணிக்கை 2,325 ஆக காணப்படுவதுடன் அதன் நிதிப்பெறுமதி ரூபா 914,663,606 ஆக காணப்பட வேண்டும். | திணைக்களத்தின் உள்ளக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (இ) 2006 அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3.1(அ) | - | மொத்த கிரய மதிப்பீடு நிறுவனத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் குறித்த மதிப்பீடுகள் ஒப்பந்தக்காரருக்கு கட்டிடங்கள் திணைக்களத்தினாலேயே தயாரிக்கப்பட்டிருந்தது. | நிர்மாணப் பணிகளுக்குரிய கட்டிடத் திணைக்களத்திற்குரியதாக கட்டிடத் திணைக்களத்திடமிருந்து மதிப்பீடு தயாரித்துக் கொள்வதற்கு அறிவுரை பணிகளாக மாத்திரம் மேற்கொள்ளப்பட்டதுடன் கட்டிடங்கள் திணைக்களத்தினால் விலைக்கேள்வி கோரப்பட்டு ஒப்பந்தக்காரர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க செயற்பட வேண்டியமை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஈ) | கட்டிட பணி அளவீட்டின் அங்கீகரிக்கப் பட்ட முறைமை - எஸ்எல்எஸ் 573 (SLS-573-Sri Lanaka Standards 573) | - | கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காகவும் அளவீட்டு பணிகளை மேற்கொண்டு கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய போதிலும் அந்நியமத்திற்கு இணங்காத வகையில் ஒரே தடவையில் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. | குறித்த மொத்த தொகையும் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு செலுத்துதல் திணைக்களத்தின் நடைமுறையாக இருந்தமையால் மொத்த தொகையும் செலுத்தப்பட்டது. எதிர்காலத்தில் முற்பணங்களை விடுவித்தலின் அடிப்படையில் கொடுப்பனவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | நிர்மாணங்களுக்க ாக கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது நியமத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

## 2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மேஹவர பியச கட்டிடத்தின் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்ட 13 தளங்களில் அமைந்துள்ள 129,799 சதுரஅடிப் பரப்புக்குரியதாக 5 அலுவலகங்களுடன் 2022 மே 24 வரையிலும் உரிய வாடகை உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சபைக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள 5 தளங்களையுடைய உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்துடன் உரிய உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கான இணக்கப்பாட்டினை பெற்றுக் கொள்ள அனுப்பப்பட்டுள்ளது.<br><br>சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களத்துடன் முறையான உடன்படிக்கையொன்று தயாரிக்கப்பட்டவாறு உள்ளது.<br><br>ஊழியர் சேம நிதியத்தின் பிரிவு தொழில் திணைக்களத்தின் கீழ் உள்ள | கட்டிடங்களை வாடகைக்கு பெற்றுக் கொள்ளும் போது முறையான வாடகை உடன்படிக்கை களை கைச்சாத்திடு வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பிரிவொன்றானமையால் உடன்படிக்கைகள் தயாரிக்கப்படவில்லை. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் குத்தகை வாடகையை அறவிடப்படுவதில்லை என்பதுடன் உரிய முறையில் உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | |

**2.6 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு செய்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படாத கடன் மீதிகள் 2 முதல் 4 வருடங்களுக்கு இடைப்பட்ட மீதி ரூபா 781,108 தொகையும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 1,186,675 தொகையும் ஆகும். | ரூபா 25,000 இனை விஞ்சும் கடன் மீதிகளில் ரூபா 196,494 ஆன மீதிகளை பதிவழிப்பதற்காக தொழில் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளதுடன் கடிதக் கோவைகள் காணாமல் போனவை, கடன் மீதிகளை விட அதிக கிரயத்தில் வழக்குத் தொடரப்பட்டதன் மூலம் அரசிற்கு செலவிட நேர்ந்துள்ளமையால் உத்தியோகத்தர்களின் மீதிகளை அறவிட முடியாதுள்ளது. சில கடன் மீதிகளை பிணையாளர்களிடமிருந்து அறவிடப்படுவதுடன் அறவிடுவதற்கு சாத்தியமுள்ள மீதிகள் தொடர்பில் வழக்கு தொடரும் பணிகள் இடம்பெற்றவாறு உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | நிலுவைக் கடனை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.7 வைப்பு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2 பொது வைப்புக் கணக்குகளின் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதிகளின் கூட்டுத்தொகையான ரூபா 710,278,354 தொகையில் 62 சதவீதம் அதாவது ரூபா 443,591,355 தொகை இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பில் நிதிப் பிரமாணம் 571(2) மற்றும் (3) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இரண்டு வருடங்களை விஞ்சிய வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்வதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் பல்வேறு காரணங்களால் இத்தொகை செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ள காலாவதியான பொது வைப்புக்களை மீள வரவழைத்துக் கொள்வதில் சிரமங்கள் காணப்படுகின்றமையால் இந்த தொகை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.<br><br>இரண்டு வருடங்களை விஞ்சிய அரச வருமானத்திற்கு செலவு வைக்க கூடிய வைப்புக்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | பொது வைப்புக் கணக்கில் உள்ள மீதிகளை இனங்கண்டு உரிய கணக்குகளில் தாமதமின்றி செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை மற்றும் வருமானத்திற்கு செலவு வைக்க முடியாத மீதிகள் தொடர்பில் நிதிக் கூற்றுக்களில் குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்த வேண்டியமை. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பணிப்பொறுப்புகளை நிறைவேற்றாமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) நலன்கள் உரிய முறையில் கிடைக்காமை தொடர்பில் | தீர்க்கப்படாத முறைப்பாடுகள் 128 இடையே 32 | முறைப்பாடுகளை தீர்க்கும் |

| | | | |
|---|---|---|---|
| | ஊழியர்களிடமிருந்து தொழில் ஆணையாளர் நாயகத்திற்கு மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளில் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் விசேட புலனாய்வு பிரிவிற்கு அனுப்பப்பட்ட 2015 மற்றும் 2020 காலப்பகுதிக்குரிய தீர்க்கப்படாதுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை 96 ஆகக் காணப்பட்டதுடன் மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கையில் 31 சதவீதமாகக் காணப்பட்டது. | முறைப்பாடுகளின் பணிகள் தீர்க்கப்பட்டுள்ளதுடன் தீர்க்கப்படாதுள்ள முறைப்பாடுகள் தொடர்பில் முறைப்பாடு செய்த தரப்பினர்களிடமிருந்து விசாரணைக்காக முன்வராமை, கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணத்தால் முறைப்பாடுகளின் விசாரணைகள் இடைநிறுத்தப்பட்டமை, தொழில் உத்தியோகத்தர்கள் போதியளவில் காணப்படாமை ஆகியன தீர்க்கப்படாத முறைப்பாடுகள் காணப்படுகின்றமைக்கு காரணமாக அமைந்தது. | நடைமுறை துரிதப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேம நிதிய அதிகாரச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட தனியார் ஊழியர் சேம நிதியத்தினை பேணிச் செல்லும் நிறுவனங்களின் எண்ணிக்கை 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக 117 ஆகக் காணப்பட்டது. அத்திகதியில் உள்ளபடியாக 30 நிறுவனங்களின் நிதியங்களின் மொத்த நிதியங்களின் கூட்டுத் தொகை ரூபா 106,794,071,789 ஆகும். அந்த நிதியங்கள் உரிய முறையில் மேற்பார்வை செய்வதற்கு தவறியமையால் பதிவு செய்த நிறுவனங்களின் எண்ணிக்கையை சரியாக இனங்காணாமை, பங்களிப்பு பணம் செலுத்தாத சந்தர்ப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டமை மற்றும் மிகைக் கட்டணம் நடைமுறைப் படுத்தப்படாமை, அந்நிறுவனங்களின் உத்தியோகத்தர்களால் | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக சில பிரதேசங்கள் மூடப்பட்டமை, திணைக்களத்தின் பதவியணியினுள் தொற்றுநோய்க்கு உள்ளானோர் அறிக்கையிடப்பட்டமை ஆகிய காரணங்களினால் திணைக்களத்தின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டமை, மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்ட காரணத்தால் பதவியணியில் கருத்தில் கொள்ளக் கூடிய அளவிலான எண்ணிக்கையானோர் சேவைக்கு வரவழைக்க முடியாதிருந்தமை, எஞ்சிய பதவியணி சுழற்சி முறையில் வரவழைக்கப்பட்டமை, விதிக்கப்பட்ட சுகாதார வழிகாட்டல் காரணமாக வெளிவாரி நிறுவனங்களுடன் இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்தமை ஆகிய காரணங்களின் அடிப்படையில் தனியார் | தனியார் ஊழியர் சேம நிதியம் தொடர்பில் அதிகாரச் சட்டத்தின் பிரிவுகள் திருத்தப்பட வேண்டியதுடன் அதன் பணிகள் தொடர்பில் முறையான நடைமுறை யொன்றினை உருவாக்கி கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை இடம்பெற வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | மோசடியான முறையில் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டமை, தொழில்தருனர் நிறுவனங்களின் சாசனங்கள் சமர்ப்பிக்கப்படாமை, முறைப்பாடுகளை விசாரணை செய்தல் இடம்பெறாமை மற்றும் நிதியத்தின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை, சுழற்சி அடிப்படையில் செயற்படாத நிறுவனங்கள் / நிதியங்கள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதியங்களின் மீதி மற்றும் நிலுவைப் பங்களிப்பு பணம் இனங்காணப்படாமை, நிறுவனங்களை பரீட்சித்தல் தொடர்பில் முறையான தகவல்கள் முன்வைக்கப்படாமை, தனியார் ஊழியர சேம நிதியப் பிரிவில் போதிய உத்தியோகத்தர் இல்லாதிருந்தமை மற்றும் அதிகாரச் சட்டத்தின் பிரிவுகள் நாளதுவரையாக்கப்படாமை ஆகிய காரணங்களினால் பல்வேறு இடர்கள் ஏற்பட்டுள்ளதுடன் இப்பிரிவின் பணிகளும் செயழிலந்திருந்தது. | ஊழிய சேம நிதியத்திற்குரிய நிறுவனங்கள் தொடர்பில் விசாரணைகளை எதிர்பார்த்தவாறு நிறைவேற்ற முடியாதிருந்தது. எனினும் இந்த பிரிவின் கடமைகளை நிறைவேற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பதவியணியின் கீழ் குறித்த விசாரணை பணிகளை மேற்கொள்ளல் மற்றும் அறிக்கைகளை நாளதுவரைரயாக்குதல் இடம்பெற்றவாறு உள்ளதுடன் உரிய தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் வெளிவாரி நிறுவனங்களிலிருந்து போதிய ஒத்துழைப்பு கிடைக்காமை இப்பணிகளை நிறைவேற்றுவதில் தடையாக காணப்பட்டது. | |
| (இ) | முறையான கண்காணிப்பு இல்லாதிருந்த காரணத்தால் தென்னை பயிர்ச்செய்கை சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் சேம நிதியத்திலிருந்து ரூபா 73,839,369 தொகை அதன் உத்தியோகத்தர்கள் மோசடி செய்திருந்ததுடன் வரையறுக்கப்பட்ட ஒருங்கிணைந்த பத்திரிகைக் கம்பனி உரிய திகதியில் பங்களிப்பு பணத்தை செலுத்தாத காரணத்தினால் 2019, 2020 மற்றும் 2021 ஆகிய மூன்று | இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள ஊழியர் சேமநிதிய அதிகாரச்சட்டத்தின் கீழ் தொழில் ஆணையாளருக்கு அதிகாரம் இல்லாதிருந்ததுடன் அந்த நிதியம் ஊழியர் சேம நிதியத்தின் கீழ் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. வரையறுக்கப்பட்ட ஒருங்கிணைந்த பத்திரிகைக் கம்பனி பங்களிப்பு பணம் செலுத்தாமை தொடர்பில் | தனியார் ஊழியர் சேம நிதியம் தொடர்பில் அதிகாரச் சட்டத்தின் பிரிவுகளை நிறுத்த வேண்டியதுடன் அதன் பணிகள் தொடர்பில் முறையான நடைமுறை யொன்றினை உருவாக்கி மேற்பார்வை மற்றும் |

| | | |
|---|---|---|
| வருடங்களுக்காக ரூபா 107 மில்லியனான மிகைக் கட்டணம் செலுத்த வேண்டியதாக காணப்பட்டது. | விசாரணையொன்று மேற்கொண்டு நிலுவைப் பங்களிப்பு பணம் மற்றும் மிகைக் கட்டணத்தை விதிப்பதற்கும் அப்பணத்தை அறவிடுவதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | கண்காணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டியமை. |

## 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மேஹவர பியச கட்டிடத்தில் அலுவலகம் அமைந்துள்ள தளங்களில் 20 தளங்களின் உள்ளக நிர்மாணப் பணிகள் மற்றும் இடைத்தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 9 தளங்களின் உள்ளக நிர்மாணம் மற்றும் இடைத்தடுப்புக்களுக்காக கட்டிடங்கள் திணைக்களத்திற்கு 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 460,326,053 செலுத்தப்பட்டிருந்த போதும் 2022 மார்ச் 02 ஆந் திகதி வரையிலும் அப்பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | மேவர பியச கட்டிடத்தின் தரைத்தளம், 4, 5, 8, 9, 10, 11, 12, 13, 14, 28, 29 மற்றும் 30 ஆகிய தளங்களில் உள்ளக நிர்மாணப் பணிகள் மாத்திரம் தொழில் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.<br><br>இதுவரையிலும் 8, 9, 10, 11, 12, 13 மற்றும் 14 தளங்களில் உள்ளக நிர்மாணங்கள் இடம்பெற்றவாறு உள்ளன. | உள்ளக நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்தி அலுவலகப் பணிகளை ஆக்கபூர்வமாகவும் உரிய முறையிலும் பேணிச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 பணம் விடுவிக்கப்பட்டுள்ள போதிலும் செயன்முன்னேற்றம் அடையப்பெற்றிராத செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிர்மாணங்கள் மற்றும் அபிவிருத்தி பணிகளுக்காக பணம் வழங்கப்பட்டு பணிகள் நிறைவு செய்யப்படாத வேலையின் பெறுமதி ரூபா 13,120,430,059 ஆகும். | பதிலை பின்னர் வழங்குகின்றேன். - பொறியியலாளர் (சிவில்) | நிர்மாண மற்றும் அபிவிருத்தி செயற்திட்ட பணிகளை துரிதப்படுத்தி ஆக்கபூர்வமாக ஈடுபடுத்த வேண்டியமை. |

## 3.4 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கட்டிடங்கள் திணைக்களத்தினால் நிறைவேற்றுவதற்காக 2021 ஆம் ஆண்டில் ரூபா 397,410,290 பெறுமதியான 13 ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டன. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. | | |
| (i) | 2006 அரச பெறுகைகள் வழிகாட்டியின் 3 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் முறையான பெறுகைகள் நடைமுறையொன்றினை பயன்படுத்தாது கட்டிடங்கள் திணைக்களத்திற்கு நேரடியாக ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 787 பிரகாரம் அரசின் அனைத்து நிர்மாணங்கள் மற்றும் பணிகளை நடைமுறைப் படுத்தல் தொடர்பான பொறுப்பு கட்டிடங்கள் திணைக்களத்திற்கு காணப்படுகின்றமையால் நிர்மாணப் பணிகளை அத்திணைக்களத்தின் மூலம் நிறைவேற்றுதல். | அரச பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.3 இன் பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கை மற்றும் 5.4.8 இன் பிரகாரமான செயலாற்றல் பிணை முறிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கட்டிடங்கள் திணைக்களத்தினால் அப்பணியை நிறைவேற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்த நிறுவனத்துடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடுவதற்கும் கையளிப்பு கடிதத்தினை குறித்த நிறுவனத்திற்கு வழங்குவதற்கும் செயலாற்றல் பிணையினை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | அரச பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | கட்டிடங்கள் திணைக்களத்தினால் உப ஒப்பந்ததாரர்களுக்கு மதிப்பீட்டு தொகையை விட குறைவான | கட்டிடங்கள் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்ட நிர்மாணங்கள் மற்றும் பழுதுபார்த்தல்களில் | அரச நிதிச் செலவினத்தை மேற்கொள்ளும் போது சட்டங்கள், விதிகள் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதிக்கு உப ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. விலைக்கேள்வி கோரல் மற்றும் ஒப்பந்தக்காரரை தெரிவு செய்தல் குறைந்த கிரயத்தில் மேற்கொள்ளக் கூடியதாக உள்ள போது கட்டிடங்கள் திணைக்களத்திற்கு நேரடியாக ஒப்பந்தம் கையளிக்கப்பட்டமையால் இழக்கப்பட்ட தொகை ரூபா 370.04 மில்லியன் ஆகும். | பணிகளை ஆரம்பிப்பதற்கு எனில் கட்டுநிதி வழங்கப்பட வேண்டும். அத்தொகை விடுவிக்கப்பட்ட பின்னர் பொது ஒப்பந்த நிறுவனத்திடமிருந்து முன் ஆரம்ப பணிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதால் அச்சந்தர்ப்பத்தில் நிதியேற்பாட்டினை போன்றே பணமும் திணைக்களத்திடம் காணப்பட்டமையால் மொத்த தொகையும் விடுவிக்கப்பட்டது. | பிரமாணங்களுக்கு இணங்க ஆகக்குறைந்த கிரயம் மற்றும் ஆக்கபூர்வமான முறையில் அதனை ஈடுபடுத்துவதற்கும் முகாமைத்துவ பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (iv) | மதிப்பீடுகளை தயாரிக்கும் போது அடிப்படையாகக் கொள்ளப்பட்ட பதிவேடு (BSR, SSR) மற்றும் ஆண்டிற்குரிய மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | கட்டிடங்கள் திணைக்களத்தினால் எமது திணைக்களத்திற்கு மதிப்பீடு மாத்திரம் வழங்கப்பட்டது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | அடிப்படையாகக் கொள்ளப்பட்ட பட்டோலை மற்றும் (BSR, SSR, HSR) குறிப்பிடப்பட வேண்டியதுடன் பொறியியல் மதிப்பீட்டினை இனங் காண்பதற்காக இடப்பட்டுள்ள குறியீட்டு இலக்கத்தை இட்டு தயாரிக்கப்பட வேண்டும். |
| (v) | கட்டிடங்கள் திணைக்களத்தினால் மதிப்பீடுகளை தயாரிக்கும் போது 5 சதவீத முகாமைத்துவ கட்டணத்தை உள்ளடக்கி மதிப்பிடப்பட்ட பெறுமதியை விட குறைவான பெறுமதிக்கு உப ஒப்பந்தக்காரருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்படும் மொத்த மதிப்பீட்டு பெறுமதியும் பணிகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் செலுத்தப்படுகின்றமையால் அதிக ஒப்பந்தப் | பதில் பின்னர் வழங்கப்படும். - பொறியியலாளர் (சிவில்) | அரசின் நிதிச் செலவினத்தை மேற்கொள்ளும் போது சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க ஆகக்குறைந்த கிரயத்துடன் ஆக்கபூர்வமாக ஈடுபடுத்த முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

பெறுமதியொன்றும் மேலதிக முகாமைத்துவக் கட்டணமொன்றினையும் மேற்கொள்ள நேர்ந்திருந்தது.

(ஆ) “மேஹவர பியச” கட்டிடத்தில் நிர்மாணிக்கப்பட்ட தனியார் நிர்மாணக் கம்பனியுடன் 2013 ஒக்தோபர் 03 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் 36 மாதங்களில் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு இணங்கியிருந்த போதிலும் 2019 மார்ச் 27 ஆந் திகதிய அமப/19/0761/101/046 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் ஊடாக 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் தாமதக் கட்டணங்களை செலுத்தும் அடிப்படையில் காலநீடிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்க வில்லை.

2020 கணக்காய்வு அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளவாறு இடை கொடுப்பனவு சான்றிதழ் (IPC) 13 இற்கான தாமதக் கட்டணங்களாக ரூபா 21,772,797 குறித்த தனியார் நிர்மாணக் கம்பனிக்கு 2020 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தம்

2018 யூன் 12 ஆந் திகதி தொடர் இலக்கம் 15/2018 கொண்ட தொழிலாளர் மற்றும் தொழில்சார் சங்கங்கள் இணைப்பு அமைச்சினால் வெளியிடப்பட்ட விஞ்ஞாபனத்தின் பிரகாரம் செயற்திட்ட உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் நிர்மாணம் ஒப்பந்ததாரரின் தாமதக் கட்டணங்களை அறவிடாமைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இடை கொடுப்பனவு சான்றிதழ்கள் 13 இற்காக தாமதக் கட்டணங்களாக செலுத்தப்பட்டுள்ள ரூபா 21,772,797 தொகை இடைகொடுப்பனவு சான்றிதழ்களுக்குரிய பணத்தை விடுவிக்கும் போது தாமதமாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தாமதக் கட்டணங்களை செலுத்துதல் சிவில் பொறியியளாலரின் CBM/Adm1/14/2017/8 மற்றும் 2021 யூலை 07 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கையில் C1.57 பந்தியின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தாமதமடைந்தமை தொடர்பில் அந்த நிறுவனத்திலிருந்து தாமதக் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஊழியர் சேம நிதியத்தின் உரித்தாளர்களுக்கான நலன்கள் உரிய முறையில் பெற்றுக் கொடுத்தல் திணைக்களத்தின் பிரதான பணிகளில் ஒன்றான போதிலும் அதற்கு தடையாகும் வகையில் ஊழியர்களின் பங்களிப்புக் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட வேண்டிய நலன்புரி நிதியங்களின் ஒரு பகுதி நீண்டகாலமாக பல்வேறு காரணங்களின் அடிப்படையில் அந்தக் கணக்குகளுக்கு செலவு வைக்கப்படாத தொழிலாளர் திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கின் மற்றும் இலங்கை மத்திய வங்கியில் பேணப்படும் தொழில் ஆணையாளர் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக இலங்கை மத்திய வங்கியின் தொழில் ஆணையாளர் கணக்கின் மீதி ரூபா 9,933,449,163 ஆக காணப்பட்டதுடன் 2021 செப்தெம்பர் மாதமளவில் தொழில் ஆணையாளரின் பங்களிப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு | 2021 ஆம் ஆண்டில் கொவிட் 19 தொற்றுநோய் பரவல் காரணமாக மாவட்ட அலுவலகங்களிலிருந்து குறித்த தகவல்களை பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டிருந்ததுடன் தொழில் ஆணையாளர் கணக்கிற்கு தீர்ப்பனவு செய்யும் பணிகள் தொழில் திணைக்கம், மத்திய வங்கி மற்றும் தொழில் தரப்பினர் ஆகிய மூன்று தரப்பினரின் ஒத்துழைப்பின் அடிப்படையில் இடம்பெறும் நடவடிக்கை ஆன போதிலும் தொழில் தருனர் தரப்பினரிடமிருந்து போதிய ஒத்துழைப்பு கிடைக்காமை அதனை தீர்ப்பனவு செய்யும் பணிகள் தாமதத்திற்கு தாக்கமளித்தமையை குறிப்பிடுகின்றேன்.<br><br>அவ்வாறே இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட “சீ” அறிக்கைத் திகதி இதுவரையிலும் தீர்ப்பனவு செய்யப்படாது காணப்படுகின்ற போதும் ”தொழிலாளர் ஆணையாளர்” கணக்கில் உள்ள மீதி அதிகரித்தமை தொடர்பில் தாக்கமளித்திருந்தது. | தீர்ப்பனவு செய்யப்படாதுள்ள பங்களிப்பு பணத்தை தீர்ப்பனவு செய்து துரித நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | தீர்ப்பனவு செய்யப்படாத 5-25 வருடங்களுக்கு இடைப்பட்ட பழைமையான மீதி ரூபா 4,583,817,783 ஆகும். | | |
| (ஆ) | இலங்கை மத்திய வங்கி தொழில் ஆணையாளர் கணக்கிலுள்ள மீதியை தீர்ப்பனவு செய்வதற்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா 10 மில்லியனுக்கு மேற்பட்ட தொகை செலவு வைக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் கணக்குகளை திருத்தி தனிப்பட்ட கணக்குகளுக்கு கணக்கு வைப்பதற்கு விசேட செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இச்செயற்திட்டத்திலிருந்து 23 நிறுவனங்களுக்குரிய ரூபா 920,118,836 ஆன நிதியமொன்று தீர்ப்பனவு செய்ய வேண்டியதாக காணப்பட்டது. 2021 செப்தெம்பர் 07 ஆந் திகதியின் பிரகாரம் இந்த நிறுவனங்களிடையே 09 வலயங்களுக்குரிய 10 நிறுவனங்களில் தீர்ப்பனவு செய்ய வேண்டியதாக காணப்பட்ட ரூபா 262,810,466 தொகையில் ரூபா 44,046,527 தொகை மாத்திரம் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய தீர்ப்பனவு செய்யப்படாத சதவீதம் 52 முதல் 100 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டதுடன் தீர்ப்பனவு செய்யப்படாத பெறுமதி ரூபா 218,763,939 ஆக காணப்பட்டது. | 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ரூபா 10 மில்லியனுக்கு மேற்பட்ட பங்களிப்பு பண மீதிகளான தொழில்தருனர்களுக்குரிய கணக்கினை தீர்ப்பனவு செய்யும் செயற்திட்டத்தின் செயல்முன்னேற்றம் எனது மேற்படி 2022.03.27 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தாங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டு முழுவதும் நாடு முழுவதும் நிலவிய கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக அப்பணிகளை துரிதமாக நடைமுறைப்படுத்த முடியாதிருந்தமையை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். தற்போது அந்த தீர்ப்பனவு பிணைகள் இடம்பெற்றுள்ளவாறு உள்ளமை என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன். | தீர்ப்பனவு செய்யப்படாதுள்ள பங்களிப்பு பணத்தை தீர்ப்பனவு செய்ய துரித நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (இ) | தனியார் முறை மற்றும் பகுதியளவு அரச துறையின் தொழிலாளர்களுக்குரிய | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான தீர்க்கப்பட்ட ஒட்டுமொத்த செயலற்ற வழக்குகளின் | உரித்து நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | நலன்கள் கிடைக்காமையின் அடிப்படையில் தொடரப்பட்ட வழக்குகளில் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிதிப்பெறுமதி ரூபா 3,108,693,249 தொகையான செயலற்ற 5,151 வழக்குகளும், நிதிப் பெறுமதி ரூபா 879,249,210 பெறுமதியான திறந்த பிடியாணை வழக்குகள் 2,822 எண்ணிக்கையானவையும் காணப்பட்டன. இவ்வழக்குகள் 1 முதல் 30 வருடங்களுக்கு இடைப்பட்ட காலவீச்சில் செயலற்று காணப்பட்டது. | எண்ணிக்கை 4,393 மற்றும் அதன் நிதிப் பெறுமதி ரூபா 2,162,338,383 ஆக காணப்பட்டதுடன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான திருத்தப்பட்ட ஒட்டுமொத்த திறந்த பிடியாணை வழக்குகளின் எண்ணிக்கை 2,325 ஆகக் காணப்பட்டதுடன் அதன் நிதிப்பெறுமதி ரூபா 914,663,606 ஆக காணப்பட வேண்டும். அவ்வாறே திருத்தப்பட்ட தரவுகளுக்கமைய 2022 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ஒட்டுமொத்த செயலற்ற வழக்குகளின் எண்ணிக்கை 4,596 ஆகக் காணப்பட்டதுடன் அதன் நிதிப்பெறுமதி ரூபா 1,738,630,576 ஆகக் காணப்பட்டதுடன் ஒட்டுமொத்த திறந்த பிடியாணைகளின் எண்ணிக்கை 2,958 ஆகக் காணப்பட்டதுடன் அதன் நிதிப்பெறுமதி ரூபா 642,956,437 ஆகும். | எடுத்துள்ள சட்ட நடவடிக்கைகளை துரிதப்படுத்தி தொழிலாளர் களுக்கு உரிமைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வழக்கின் ஊடாக அறவிடப்பட்ட கொழும்பு மாவட்டத்திற்குரிய நீதிமன்றத்திலிருந்து அறவிடப்பட்டு தனிப்பட்ட கணக்குகளுக்கு செலவு வைக்கப்படாதுள்ள EPF இன் பெறுமதி ரூபா 127,700,262 ஆகும். குறித்த நலனாளிகளுக்கு கொடுப்பனவு தொடர்பில் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட வழக்கு தொடருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையால் தொழில் திணைக்களத்தின் பிரதான பணிகளை | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ஊழியர் சேம நிதியத்தினால் வெளிவாரி நிறுவனங்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் தொடரப்பட்டுள்ள எண்ணிக்கை 12,535 ஆக காணப்படுவதுடன் அதன் நிதிப் பெறுமதி ரூபா 10,625,616,120 ஆகும். அவ்வாறே 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான வெளிவாரி நிறுவனங்களினால் நிதியத்திற்கு எதிராக நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்டுள்ள எண்ணிக்கை 75 ஆக காணப்படுவதுடன் அதன் நிதிப்பெறுமதி ரூபா | தீர்க்கப்படாதுள்ள பங்களிப்பு பணத்தை தீர்ப்பனவு செய்வதற்கு மத்திய வங்கியுடன் இணைந்து துரித நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | நிறைவேறாததுடன் தொழில் அமைச்சின் நோக்கம் தொடர்பில் பாதகமான தாக்கமொன்று ஏற்பட்டிருந்தது. | 233,966,799 ஆகும். | |
| (உ) | மெஹவர பியச கட்டிடத்தில் அமைந்துள்ள அலுவலகங்களில் அவற்றை ஆரம்பித்த திகதியிலிருந்து 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 171,463,000 ஆன வாடகைப் பணம் நிலுவையாக காணப்பட்டது. 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்று காணப்படும் இடத்தின் அளவானது 102,725 சதுரஅடிகளாவதுடன் அவற்றுள் 39,180 சதுரஅடிகளின் மாதாந்த மதிப்பீட்டு வாடகை ரூபா 6,981,000 ஆகும். (4, 5, 28-31 தளங்கல் தவிர) அதற்கமைய 2021 ஆம் ஆண்டுக்காக ரூபா 83,772,000 ஆன வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | குறித்த நிறுவனம் மெஹவர பியச கட்டிடத்தில் தாபிக்கப்பட்ட திகதியிலிருந்து குறித்த குத்தகை வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>17 ஆவது தளம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேற்பார்வை மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. | வெற்றிடமாகவுள்ள இடங்களில அலுவலகங்களை தாபிப்பதை துரிதப்படுத்து வதற்கும் வாடகை அடிப்படையில் வழங்குவதன் மூலம் வாடகை வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கும் துரித நடவடிக்கை எடுத்தல். |
| (ஊ) | தொழில் செயலக அலுவலகக் கட்டிடத்தின் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத பரப்பளவு 36,741 சதுரஅடிகள் 10 மாதங்கள் முதல் 02 வருடங்கள் வரையான காலவீச்சில் விளைவற்றுக் காணப்படுவதுடன் 2021 ஆம் ஆண்டுக்காக ரூபா 62,481,000 ஆன வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது. தரைத்தளத்தின் 1,336 சதுரஅடியில் தாபிக்கப்பட்டிருந்த தொழிலாளர்களின் நம்பிக்கை பொறுப்பு | தொழிலாளர்கள் பொதுச் செயலாளர் அலுவலகக் கட்டிடத்தின் 7 ஆவது தளத்தின் 2020 செப்தெம்பர் மாதம் முதல் 2021 ஆகஸ்ட் மாதம் வரையும் தொழிலாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் நடாத்திச் செல்லப்பட்டிருந்தது. 2021 ஆகஸ்ட் மாதம் முதல் அத்தளம் விளைவற்றுக் காணப்படுவதுடன் 2022 யூலை 01 ஆந் திகதி முதல் அதனை கைத்தொழில் இராஜாங்க அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. | வெற்றிடமாகவுள்ள இடங்களில அலுவலகங்களை தாபிப்பதை துரிதப்படுத்து வதற்கும் வாடகை அடிப்படையில் வழங்குவதன் மூலம் வாடகை வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கும் துரித நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | நிதியச் சபையிலிருந்து வாடகை அறவிடப்பட்டிராததுடன் 840 சதுரஅடியில் தாபிக்கப்பட்டிருந்த தபால் திணைக்களத்திடமிருந்து மாதாந்தம் ரூபா 225 ஆன சிறிய தொகை வாடகையாக அறவிடப்பட்டிருந்தது. | | |
| (எ) | இரத்தினபுரி மாவட்ட தொழில் அலுவலகம் வெள்ள அபாயத்திற்குட்பட்டு காணப்படுகின்றமையால் வாடகை கட்டிடமொன்றில் தாபிக்கப்பட்டு ரூபா 11,177,000 ஆன மதிப்பிடப்பட்ட தொகைக்கு கட்டிடங்கள் திணைக்களத்தின் மூலம் பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டு அதனை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. பழுதுபார்த்தல் பணிகளை ஆரம்பிக்க முன்னர் கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட அபாய நிலைமைகள் இல்லாதிருந்தமை குறித்த சான்றுப்படுத்தல் மற்றும் குறுங்கால பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துதல் தொடர்பிலான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | பழுதுபார்த்தல் பணிகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் ஊடாக அவதான நிலைமைகள் இல்லையென்தை உறுதிப்படுத்தும் சான்றிதழொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிராததுடன் மதிப்பீட்டு அறிக்கையில் குறுங்கால பரிந்துரைகளுக்காக கட்டிடங்கள் திணைக்களத்திற்கு அறிவித்திராததுடன் அதற்காக நிபுணர்களின் அறிவு கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் ஊடாக பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | அபாயம் மிக்க இடங்களில் கட்டிடங்களை நிர்மாணிக்கும் போது / பழுதுபார்க்கும் போது உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கமைய மற்றும் தர அறிக்கைகளை பெற்று பரிந்துரைகளை நடைமுறைப் படுத்த வேண்டியமை. |
| (ஏ) | 2021 ஆம் ஆண்டில் பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்கப்படாத ரூபா 77,067,802 தொகையான 17 நிர்மாணப் பணிகள் பதிவேட்டை கையளிப்பதற்காக பெறுகைகள் குழுவின் பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. 2018 | நிர்மாணப் பணிகள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இனங்காணப்பட்ட மாவட்ட அலுவலகங்களிலிருந்து கோரப்பட்ட அத்தியவசிய பணிகள் என்பதால் 2021 ஆம் ஆண்டின் பெறுகைகள் திட்டத்தினை தயாரிக்கும் போது திட்டவட்டமாக இனங்காணாத பணிகள் | பெறுகைகள் திட்டத்தினை சரியாக தயாரித்து அதற்கமைய செயற்பட வேண்டியதுடன் கணக்காய்வினால் கோரப்பட்டுள்ள தகவல்களை கணக்கீட்டு |

| | | | |
|---|---|---|---|
| | சனவரி 01 ஆந் திகதி முதல் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பான தகவல்கள் 2022 மார்ச் 29 ஆந் திகதி கோரப்பட்டுள்ள போதிலும் இதுவரையிலும் பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | உத்தியோகத்தர் இனால் சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஐ) | நிதியல்லாத சொத்துக்களின் உரித்து, நிலவுகை, அளவு, பெறுமதி மற்றும் பயன்பாடு தொடர்பில் உறுதிப்படுத்துவதற்கு தேவையான தகவல்கள் 2022 மார்ச் 15 ஆந் திகதிய LSW/B/LD/01/2022/INF21 ஆம் இலக்க கடித்தில் கோரப்பட்டிருந்த போதிலும் அத்தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை. | நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்படுவதுடன் நிலையான சொத்துக்கள் வகைப்படுத்தலின் அடிப்படையில் பெறுமதி தொடர்பான விரிவான பட்டோலை 700 பக்கங்களை மேற்பட்டதாக காணப்படுகின்றமையால் அச்சிடுதல் சிரமம் என்பதால் மென்பிரதியொன்றினை வழங்க முடியும். | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கோரப்பட்ட தகவல்கள் கணக்கீட்டு உத்தியோகத்தர் இனால் சரியாக சமர்ப்பிக்க வேண்டியமை. |

**4. நல்லாளுகை**

**4.1. உள்ளகக் கணக்காய்வு**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளக கணக்காய்வு பரிசோதனைகளை திணைக்களத்தில் தொழில் அலுவலகங்களை நடாத்திச் செல்லும் பொது சான்றுகள் பதிவேடு உரிய முறையில் மேற்பார்வை செய்யப்படாமையால் அறிவித்தல்களை அனுப்புதல், வழக்கு தொடருதல், முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு பாரிய காலதாமதமொன்று ஏற்பட்டிருந்தது. | உரிய காலப்பகுதியினுள் (2020-2021) நாட்டில் நிலவிய கொவிட் 19 நிலைமை காரணமாக அனைத்து பதவியணியினரையும் ஒரே தடவையில் வரவழைக்கப்படவில்லை. அவ்வாறே குறித்த காலப்பகுதியில் தொடர்ச்சியாக நிலவிய போக்குவரத்து தடைகள் காரணமாக கடமைகளுக்கு வருகை தருவதற்கு திணைக்களத்தின் ஊழியர்களைப் போன்றே முறைப்பாடுகள் தொடர்பில் | உள்ளக கணக்காய்வில் சுட்டிக் காண்பிக்கப் பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு உரிய நடவடிக்கை எடுத்தல் முகாமைத்துவ த்தினால் மேற்கொள்ளப் படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) வலய தொழில் அலுவலகம் 03 இன் மதிப்பீட்டு பணிகள் நிறைவு செய்யப்படாத 503 குறைபாடுகள் காணப்பட்டதுடன் தாமதமாகியுள்ள காலம் 458 நாட்கள் முதல் 1146 நாட்கள் வரையான வீச்சில் காணப்பட்டது. | நடவடிக்கை எடுப்பதற்கு அவசியமான ஊழியர்களும் குறித்த நபர்களையும் ஒரே தடவையில் வரவழைத்தல் நடைமுறையில் சிரமமானதாக காணப்பட்டது. மேலும் வழக்கு தொடருவதற்குரிய தபால் பணிகளும் மேற்குறிப்பிடப்பட்ட விடயத்தின் காரணமாக தடைப்பட்டிருந்தது. | உள்ளக கணக்காய்வில் சுட்டிக் காண்பிக்கப் பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 3,121 ஆன போதிலும் உள்ளபடியான பதவியணி 2,593 ஆனமையால் 528 வெற்றிடங்கள் நிலவின. | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 528 வெற்றிடங்கள் நிலவிய போதிலும் இலங்கை நிர்வாக சேவையின், இலங்கை பொறியியல் சேவையின், அரச முகாமைத்துவ சேவையில் நிலவும் வெற்றிடங்களை பொது நிர்வாக அமைச்சினால் நிரப்ப வேண்டியதுடன் திணைக்களத்திற்குட்பட்ட உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் திணைக்களத்தினால் நிரப்பப்படும். | திணைக்களத்தின் எதிர்பார்த்த பணிப் பொறுப்புக்களை செயற்திறனாக நடைமுறைப் படுத்துவதற்கு இயலுமான வகையில் மனிதவளம் உச்சமாகவும் செயற்திறனாகவும் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |